பெண்களுக்கும் அங்கே உரிமை உண்டு என்று தெரிவிக்கப்பட்டு இப்போது அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. அதைப்போலவே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கூறியுள்ள கோரிக்கையை அரசு பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 44. திரு. எஸ்.எம். பாலன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

44—

திருமண மண்டபம்

***6686—திரு. எஸ்.எம். பாலன்**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி தொகுதியிலுள்ள அன்பில் மாரியம்மன் கோயில் வளாகத்தில் அறநிலையத் துறை சார்பில் திருமண மண்டபம் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இடவசதி இல்லாததால் திருமண மண்டபம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

திரு. எஸ்.எம். பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லால்குடி தொகுதியில் அன்பில் கிராமத்தில் மாரியம்மன் கோயில் வளாகத்தில் திருமண மண்டபம் கட்டினால் 25 கிராமத்து ஏழை எளிய மக்கள் பயன் அடைவார்கள். அத்துடன் அங்கே இடவசதியும் அதிகமாக இருக்கிறது; தண்ணீர் வசதியும் இருக்கிறது. அத்தோடு ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாதர் திருக்கோயிலினுடைய நிர்வாகத்தின்கீழ் வருவதால் அங்கே நிதிவசதி பெறுவதற்கு வழி இருக்கிறது. சமயபுரம் மாரியம்மன் கோயில், மலைக்கோட்டை உச்சிப்பிள்ளையார் கோயில் ஆகிய நிர்வாகங்களிலேயிருந்து கடன் வசதி பெற்று இந்தத் திருமண மண்டபத்தைக் கட்டித்தர ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

2002 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பில் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் என்பது ஸ்ரீரங்கம் அருள்மிகு ஸ்ரீரங்கநாதர் திருக்கோயிலினுடைய உபகோவில்களில் ஒன்றாகும். இத்திருக்கோயில் வளாகம், தேர்த் திருநாள் மற்றும் பஞ்சபிரகாரத் திருநாட்களில் பயன்படும் அளவில் மட்டுமே உள்ளது. திருமண மண்டபம் கட்டும் அளவிற்கு இடவசதி இத்திருக்கோயில் வளாகத்தில் இல்லை. எனவே அன்பில் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் வளாகத்தில் திருமண மண்டபம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், இடத்தை பெற்று தருவார்களேயானால் அருகில் இருக்கின்ற சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் ஆலயத்தினுடைய நிதியிலிருந்து கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ்.எம். பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இடவசதி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனால் அந்தத் திருமண மண்டபத்தை அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அன்பில் பெரியசாமி.

திரு. அன்பில் பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் அங்கே இடவசதி இல்லையென்று கூறினார்கள். ஆனால் நிறைய இடங்கள் இருக்கின்றன. ஏனென்றால் எனது சொந்த ஊரான அன்பில் கிராமத்திலே, சமயபுரம் மாரியம்மன் கோயிலுக்கு அடுத்தாற்போல் அருள்மிகு அன்பில் மாரியம்மன் கோயில் மிகுந்த பிரசித்தி பெற்ற தலம். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து இந்தக் கல்யாண மண்டபத்தைக் கட்டுவதற்கும், அதேபோல் அம்மை நோயால் பாதிக்கப்பட்ட பக்தர்கள் அங்கே வந்து தங்குவதற்குப் போதிய இடம் இல்லாததாலும் புதியதாக ஒரு கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கோரிக்கையை நிறைவேற்ற அவர்கள் அந்தப் பகுதியிலே இருக்கின்ற வசதி படைத்தவர்கள் மூலம் நிதியை வசூலித்துத் தருவார்களேயானால் அருகிலே இருக்கின்ற சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் ஆலயத்தினுடைய நிதியிலிருந்து கட்டுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[2002 ஏப்ரல் 1

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.ஏ.எம். உசேன், திருமண மண்டபத்திற்கு நிதியுதவி கொடுக்கிறீர்களா?

திரு. எஸ்.ஏ.எம். உசேன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் மிகப் புகழ் பெற்ற பார்த்தசாரதி கோவில்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது அன்பில் மாரியம்மன் கோயில் பற்றிய கேள்வி. திரு. அன்பில் பெரியசாமி, உங்களுடைய அப்பா இருக்கும்போது சொல்லியிருந்தால் கட்டிக் கொடுத்திருப்பார் அல்லவா? திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி. கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் லால்குடி தொகுதியிலுள்ள அன்பில் மாரியம்மன் கோயில் வளாகத்தில் திருமண மண்டபம் கட்டுவதற்கு இடவசதி இல்லை என்ற காரணத்தை இங்கே சொன்னார்கள். இப்போது தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய ஆலயங்களிலே, ஆலய வளாகங்களிலே அந்தத் திருமண மண்டபங்கள் எந்த விதிமுறையிலே எந்த அடிப்படையிலே, என்ன அளவுகோலை வைத்துக் கட்டப்படுகின்றன? அப்படிக் கட்டப்படக்கூடிய அந்த சூழ்நிலையில் இப்போது கோயில் வளாகத்திலே இருக்கக்கூடிய திருமண மண்டபங்கள் எத்தனை? அந்தத் திருமண மண்டபங்கள் மூலமாக ஆண்டிற்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது ரொம்பப் பெரிய கேள்வி.

மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனுடைய அளவுகோல் எவ்வளவு என்பது பொறியாளர்களால் நிர்ணயிக்கப்படுகிறது. கட்டடம் எவ்வளவு என்பதைப்பற்றி தனியாகக் கேள்வி போட்டால் நான் பதில் தருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 45, திரு. ஆர். சக்ரபாணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அடுத்த கேள்வியும் இதே பொருள் குறித்து வருவதால் இரண்டையும் ஒன்றாக எடுத்துக்கொண்டால் நன்றாக இருக்கும்.